**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் திங்கட்கிழமை**
**அசல் வழக்கு எண்.123/2025**
**CNR NO.TNKR090000972025**

இமயமணிவாசகம் (எ) மாணிக்கவாசகம் ... வாதி

**/எதிர்/**

1. தமிழ்நாடு அரசு சார்பாக
மாவட்ட ஆட்சியர், கரூர்
2. வட்டாட்சியர், கடவூர் தாலுகா
3. கிராம நிர்வாக அலுவலர், பாப்பையம்பட்டி கிராமம்
4. சார்பதிவாளர், தரகம்பட்டி,
சார்பதிவாளர் அலுவலகம்,
5. சாத்தவேளார் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 18.04.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.நாகேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 5 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.காயத்ரி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதி தரப்பில் கிரைய ஆவண எண்.619/1984 ல் கண்டுள்ள மாணிக்கவாசகம் என்பதும், இமயமணிவாசகம் என்பதும் ஒரு நபர் என விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்</u>**

1) வாதியின் தகப்பனார் சாத்தவேளார், தாயார் கண்ணம்மாள். 18.06.1984 ல் வாதி இளவராக இருந்த போது அவரது தகப்பனார் வாதி மற்றும் சகோதரர் பெயரில் காப்பளராக இருந்து கிரைய ஆவண எண்.619/1984 என்ற ஆவணம் மூலமாக கிரையம் பெற்றார். மேற்படி ஆவணம் மூலம் சர்வே எண்.230/1 ல் 24 சென்டும், சர்வே எண்.230/7 ல் 76 சென்டும், சர்வே எண்.230/8 ல் 9 சென்டும் மற்றும் சர்வே எண்.230/16 ல் 66 சென்ட் ஆகிய இடங்களை கிரையம் வாங்கினார். மேற்படி தேதியில் வாதிக்கு 4 வயது. எனவே வாதியின் தகப்பனார் வாதிக்கு காப்பாளராக இருந்து மேற்படி கிரையத்தை வாங்கியுள்ளார்.

2) மேற்படி கிரைய ஆவணத்தில் வாதியின் பெயர் மாணிக்கவாசகம் என்று குறிப்பிடப்பட்டு கிரையம் பெறப்பட்டது. பின்னிட்டு வாதி தனது தாத்தா வீட்டிற்கு சென்று அங்கேயே தங்கி தனது பள்ளி படிப்பை முடித்தார். அங்கு வாதியின் பெயர் இமயமணிவாசகம் என பள்ளி சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களுக்குண்டான பட்டாவில் மாணிக்கவாசகம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி உடல் ஊனமுற்ற நபர். வாதியின் பெயர் மாற்றத்தை சரி செய்ய வாதி 2,3 பிரதிவாதிகளை அணுகி கேட்ட போது அவர்கள் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேட வேண்டுமென கூறிவிட்டனர். எனவே வாதி தனது பெயர் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். கிரைய ஆவண எண்.619/1984 ல் கண்டுள்ள மாணிக்கவாசகம் என்பதும், இமயமணிவாசகம் என்பதும் ஒரு நபர் தான் என விளம்புகை பரிகாரம் செய்யக்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2ம் பிரதிவாதி தாக்கல் செய்து 1, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>**

3) வழக்குரை 3 முதல் 7 ல் உள்ள சங்கதிகள் பொய்யானதாகும். 3 முதல் 6 பத்திகளில் சொல்லப்பட்டுள்ள வாதியின் தகப்பனார் சாத்தவேளார் மற்றும் கண்ணம்மாள் இருவரும் திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு குழந்தை பிறந்ததாகவும், 18.06.1984 ல் 5ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். மேலும் அந்த கிரைய ஆவணம் ஏற்பட்ட போது வாதிக்கு 4 வயது என சொல்வதும், வாதியின் பெயர் கிரைய ஆவணத்தில்

மாணிக்கவாசகம் என கண்டுள்ளது என்றும், வாதியின் காப்பளாரான சாத்த வேளார் மேற்படி கிரையத்தை முடித்துள்ளார் என்பதும் வாதிக்கு மாணிக்கவாசகம் என்றும், இமய மாணிக்கவாசகம் என்றும் இரண்டு பெயர்களில் அழைப்பதையும் வாதியே நிரூபிக்க வேண்டும்.

4) வழக்குரை பத்தி 6 மற்றும் 7ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது. உண்மையில் கரூர் பாப்பயம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்.230/16, 230/1B, 230/7 ஆகிய சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சாத்தவேளார் மற்றும் மாணிக்கவாசகம் என்ற பெயரில் கூட்டாக பட்டா எண்.1849ல் உள்ளது. சர்வே எண்.230/8க்கு சாத்தவேளார் மகன் சுந்தரமூர்த்தி மற்றும் நால்வர் பெயரில் கூட்டாக பட்டா உள்ளது. தேவையற்ற தரப்பினர்களை சேர்த்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

<u>4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்</u>

5) வழக்குரை 3 முதல் 7ல் உள்ள சங்கதிகள் பொய்யானதாகும். 3 முதல் 6 பத்திகளில் சொல்லப்பட்டுள்ள வாதியின் தகப்பனார் சாத்தவேளார் மற்றும் கண்ணம்மாள் இருவரும் திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு குழந்தை பிறந்ததாகவும், 18.06.1984ல் 5ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். மேலும் அந்த கிரைய ஆவணம் ஏற்பட்ட போது வாதிக்கு 4 வயது என சொல்வதும், வாதியின் பெயர் கிரைய ஆவணத்தில் மாணிக்கவாசகம் என கண்டுள்ளது என்றும், வாதியின் காப்பளாரான சாத்த வேளார் மேற்படி கிரையத்தை முடித்துள்ளார் என்பதும் வாதிக்கு மாணிக்கவாசகம் என்றும், இமய மாணிக்கவாசகம் என்றும் இரண்டு பெயர்களில் அழைப்பதையும் வாதியே நிரூபிக்க வேண்டும்.

6) வழக்குரை பத்தி 6 மற்றும் 7ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது. உண்மையில் கரூர் பாப்பயம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்.230/16, 230/1B, 230/7 ஆகிய சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சாத்தவேளார் மற்றும் மாணிக்கவாசகம் என்ற பெயரில் கூட்டாக பட்டா எண்.1849ல் உள்ளது. சர்வே எண்.230/8க்கு சாத்தவேளார் மகன் சுந்தரமூர்த்தி மற்றும் நால்வர் பெயரில் கூட்டாக பட்டா உள்ளது. தேவையற்ற தரப்பினர்களை சேர்த்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>5 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்</u>**

7) வாதியின் உடன்பிறந்தவர்கள் குறித்த சங்கதிகள் உண்மையாகும். வாதி இளவராக இருந்த போது அவர் பெயரில் கிரையம் பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது உண்மையானது. மாணிக்கவாசகம் என்பவர் தனது 4 வயது வரை என்னுடன் தான் வாழ்ந்து வந்தார். பின்னிட்டு என்னுடைய தந்தை வீட்டில் வளர்ந்து வந்தார். அவர் தனது குழந்தை பருவத்தில் இருந்தே தாத்தா வீட்டில் வசித்து வருவதால் அரசு ஆவணங்களில் இமயமணிவாசகம் என பதிவாகி உள்ளது. தற்போது வாதி பெயரில் உள்ள சொத்தை விற்பனை செய்ய முயன்ற போது தான் மேற்படி தவறு கண்டறியப்பட்டது. எனவே வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது போல வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலும் அவர் பெயர் இமயமணிவாசகம் என்பதே ஆகும். எனவே வாதியின் வழக்கை அனுமதிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

8) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of Declaration as alleged in the plaint? |
| 2. | To what other relief? |

9) வாதி தரப்பில் வாதி இமய மணிவாசகம் (எ) மாணிக்கவாசகம் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், வாதியின் சகோதரர் சுந்தரமூர்த்தி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

**<u>எழுவினா எண்.1 ன் தீர்வு</u>**

**வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

10) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் 18.06.1984 ல் வாதி இளவராக இருந்த போது அவரது தகப்பனார் வாதி மற்றும் வாதியின் சகோதரர் பெயரில் காப்பளராக இருந்து கிரைய ஆவண எண்.619/1984 என்ற ஆவணம் மூலமாக கிரையம் பெற்றார் என்றும்

மேற்படி கிரையம் பெறும் போது வாதிக்கு 4 வயது என்றும் எனவே வாதியின் தகப்பனார் வாதிக்கு காப்பாளராக இருந்து மேற்படி கிரையத்தை வாங்கியுள்ளார் என்றும் மேற்படி கிரைய ஆவணத்தில் வாதியின் பெயர் மாணிக்கவாசகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பின்னிட்டு வாதி தனது தாத்தா வீட்டிற்கு சென்று அங்கேயே தங்கி தனது பள்ளி படிப்பை படித்துள்ளதால் அங்கு வாதியின் பெயர் இமயமணிவாசகம் என பள்ளி சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதியின் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களுக்குண்டான பட்டாவில் மாணிக்கவாசகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனவே வாதியின் பெயர் இமயமணிவாசகம் என்பதும், மாணிக்கவாசகம் என்பதும் ஒரு நபர் தான் என வாதிடப்பட்டது.

11) மேற்படி வாதத்தை நிரூபிக்க வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 குடும்ப வம்சாவழிப்பட்டியல். வா.சா.ஆ.2–18.06.1984 ம் தேதிய கிரைய ஆவணம். மேற்படி கிரைய ஆவணத்தில் வாதி இளவராக இருந்த போது அவரது தகப்பனார் வாதி மற்றும் வாதியின் சகோதரர் பெயரில் காப்பளராக இருந்து கிரைய ஆவண எண்.619/1984 என்ற ஆவணம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் வாதியின் பெயர் மாணிக்கவாசகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

12) வா.சா.ஆ.3–வாதியின் வாக்காளர் அடையாள அட்டை. வா.சா.ஆ.4–வாதி பெயரில் உள்ள தமிழ்நாடு அரசு உதவிகள் பதிவு புத்தகம். வா.சா.ஆ.5–வாதியின் பள்ளி மாற்றுச்சான்றிதழ். வா.சா.ஆ.6–வேலைவாய்ப்பு அடையாள அட்டை. வா.சா.ஆ.8–வாதியின் ஆதார் அடையாள அட்டை. மேற்படி ஆவணங்களில் வாதியின் பெயர் இமயமணிவாசகம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

13) வா.சா.ஆ.7–பட்டா எண்.1849. மேற்படி பட்டாவில் கரூர் பாப்பயம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள்.230/16, 230/1B, 230/7 ஆகிய சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சாத்தவேளார் மற்றும் சாத்தவேளார் மகன் மாணிக்கவாசகம் என்றே வாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

14) வா.சா.1 தனது சாட்சியத்தில், "மாணிக்கவாசகம் என்பதும் இமயமணிவாசகம் என்பதும் ஒருவர்தான் என்றும் எனது பள்ளி மாற்றுச் சான்றிதழில் இமயமணிவாசகம் என கண்டுள்ளது என்றும் எனது ஆதார் அட்டையில் இமயமணிவாசகம் என்றுதான் உள்ளது என்றும், எனது வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றிலும் இமயமணிவாசகம் என்றுதான் உள்ளது என்றும் வா.சா.ஆ.2 ஆவணம் வாங்கும் போது எனது பெயரை தவறுதலாக மாணிக்கவாசகம் என சொல்லிவிட்டார்கள் என்றும் எனது பெயர் வா.சா.ஆ.2 ஆவணத்தில் தவறாக உள்ளதை திருத்தம் செய்ய எனது கிரையதாரர் மூலம் திருத்தல் பத்திரம் செய்திருக்கலாம் என்றால் அதற்கு நான் முயற்சி செய்யவில்லை, தற்போது தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனது தவறான பெயரை மாற்ற அரசிதழில் பணம் செலுத்தி எனது பெயரை மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை என்றும் எனது பெயரை மாற்ற அரசிதழில் விளம்பரம் கொடுத்து மாற்றிக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்றும், அவ்வாறு செய்யாமல் இவ்வழக்கு தாக்கல் செய்தது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல என்றும் வருவாய்த்துறையில் இரண்டு நபர்களும் ஒருவரே என சான்று வழங்குவது நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல என்றும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அரசு அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டிய அறிவிப்பை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வருவாய்த்துறையில் மனு செய்து அவர்கள் நீதிமன்றத்தை நாடிக்கொள்ளும்படி ஏதாவது சொன்னார்களா என்றால், நான் மனு எதுவும் கொடுக்கவில்லை, சார்பதிவாளருக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல" என சாட்சியம் அளித்துள்ளார்.

15) வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "வா.சா.1 எனது தம்பி. எனக்கும் எனது தம்பிக்கும் பிறப்பு சான்றிதழ் இல்லை. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.2 ல் மாணிக்கவாசகம் என்றும், எனது தம்பியின் பள்ளிச் சான்றிதழ்களில் இமயமணிவாசகம் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. இரு பெயரும் எனது தம்பியுடையது தான் என இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வருவாய்த்துறையில் எனது தம்பி மனு ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. முறையாக சட்ட நடவடிக்கைகளை கடைபிடிக்காமல் இவ்வழக்கை எனது தம்பி தாக்கல் செய்துள்ளார் என்றும், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல" என சாட்சியம் அளித்துள்ளார்.

16) மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், 18.06.1984 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.2 ல் சாத்தவேளார் மகன் மாணிக்கவாசகம் என்ற வாதியின் பெயரும், வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வாதியின் பெயர் இமயமணிவாசகம் என்பதும் ஒரு நபர் என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா எண்.2 –ன் தீர்வு</u>**

**வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

17) வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்துள்ள நிலையில் வாதிக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.2 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு கிரைய ஆவண எண்.619/1984 ல் கண்டுள்ள மாணிக்கவாசகம் என்பதும், இமயமணிவாசகம் என்பதும் ஒரு நபரான வாதி தான் என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.04.20 15:20:11 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 மாணிக்கவாசகம் (வாதி)

வா.சா.2 சுந்தரமூர்த்தி (வாதியின் சகோதரர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | குடும்ப வம்சாவழிப்பட்டியல் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 18.06.1984 | கிரைய ஆவணம் (7 பக்கங்கள்) | அசல் |
| வா.சா.ஆ.3 | – | வாதியின் வாக்காளர் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.4 | – | தமிழ்நாடு அரசு உதவிகள் பதிவு புத்தகம் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.5 | – | வாதியின் பள்ளி மாற்றுச்சான்றிதழ் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.6 | – | வேலைவாய்ப்பு அடையாள அட்டை | கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | 28.01.2025 | பட்டா எண்.1849 | கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | – | வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

**–இல்லை–**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

**–இல்லை–**

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.04.20 15:20:19 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

******************************
**PDM COURT, KULITHALAI**

**FAIR  JUDGMENT**

**O.S.No.123/2025**

**D.D.20.04.2026**

**AFT**

***************************